

# Madurai Symposium 2007
**Advancing Development**
Building Alliances
24-29 September



---

செய்தியறிக்கை

செப்டம்பர் 26, 2007

## 'இயற்கைப் பேரிடர்களால் ஆண்டிற்கு ஆறு இலட்சம் பேர் பாதிக்கப்படுகின்றனர்'

மதுரை கூடலரங்கம் 2007 நிகழ்வில் இன்று 'சமூக அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய கடல் மற்றும் மீன் வள ஆராய்ச்சி மையத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் எம்.முகமது காசிம், 'புயல், மழை, வெள்ளம், நெருப்பு, காற்று போன்ற பேரிடர்களால் இந்திய நாட்டில் மட்டும் ஏறக்குறைய ஆண்டிற்கு 6 இலட்சம் பேர் பாதிக்கப்படுகின்றனர். பேரிடர் பாதிப்புகளைத் தடுப்பது என்பது சுற்றுச்சூழல் மேம்பாட்டிலும், இயற்கை வளங்களைப் பேணுவதிலுமே உள்ளது. கடலோரப் பகுதிகளை அதிகமாகக் கொண்ட தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் பேரிடர் தொழில் நுட்பங்களை சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் உயிரிழப்புகளைக் குறைக்க இயலும்' என்றார். தமிழகத்தின் கடலோரப் பகுதிகளைச் சார்ந்த அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைவர்கள் உள்ளிட்ட முன்னூறுக்கும் மேற்பட்டோர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். ஆக்ஸ்பாம் இன்டர்நேசனல் திட்ட அலுவலர் அசுந்தா டோரதி பேசுகையில், 'ஆழிப்பேரலையில் மக்கள் பாதிக்கப்பட்டபோது, அம்மக்களாலேயே தன்னார்வத்துடன் மீட்புப் பணிகள் செய்யப்பட்ட விதம் சிறப்பானதாகும். மக்களின் அனுபவமும், திறமையும் ஒருங்கிணைக்கப்பட்டால் அதுவே மிகப் பெரிய சக்தியாக உருவெடுக்கும். அதனைச் சரியான முறையில் பேரிடர் மேலாண்மைக்குப் பயன்படுத்துவதே நம் முன் உள்ள சவாலாகும். மனிதனுக்கும், இயற்கைக்கும் இடையிலான உறவு அறுந்து போனதால்தான் பல்வேறு இயற்கைப் பேரிடர்களை நாம் எதிர் கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளோம்' என்றார்.

தேசிய தொலையுணர்வு முகமையின் (விண்வெளிக் கழகம்) விஞ்ஞானி பெருமாள் பேசுகையில், 'பேரிடர் மேலாண்மைக்கான தொழில்நுட்பம் பெருமளவில் வளர்ந்துள்ளது. அதனைச் சரியான முறையில் பயன்படுத்தவும், கையாளவும் மக்களைத் தயார்ப்படுத்த வேண்டும்' என்றார். சுனாமிப் பேரலையின் போது தமிழகக் கடலோரப் பகுதிகளில் ஏற்பட்ட பேரழிவு குறித்தும், அதற்குப் பிறகு அங்கு மேற்கொள்ளப்பட்ட இடர் மீட்புப் பணிகளையும் விளக்கி தானம் அறக்கட்டளையின் அணித்தலைவர் வைத்தியநாதன் பேசினார். பேரிடரின்போது தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளும் விதம் குறித்தும், தற்காத்துக் கொள்ளும் முறைகள் குறித்தும் தானம் அறக்கட்டளையின் திட்ட நிர்வாகி சரவணன் திரைக்காட்சியின் மூலம் விளக்கினார். பேரலைப் பேரிடர் மேலாண்மையில் அரசு மற்றும் தன்னார்வ அமைப்புகளின் பங்கு குறித்து தானம் அறக்கட்டளையின் திட்ட அலுவலர் சந்தானம் பேசினார்.

பேரிடர் முன்னறிவிப்புப் பணிக்காக கிராமத் தகவல் மையங்களை வலுப்படுத்தல், பசுமையும், தூய்மையும் நிறைந்த மாநகராக மதுரையை மாற்றுதல், கிராமங்களில் தொழிற்கூடங்களை உருவாக்குவதன் வாயிலாக வேலைவாய்ப்பின்மையைத் தவிர்க்கச் செய்தல் போன்ற பல்வேறு பொருட்களில் இன்று கருத்தரங்குகள் நடைபெற்றன. தமுக்கம் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள 22 சிறப்புக் குடில்களில் கருத்தரங்குகளும், மாநாடுகளும் நடைபெற்றன. மாலையில் ஆந்திரம் மற்றும் கர்நாடக மாநிலத்தைச் சார்ந்த நாட்டுப்புறக் கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகளும், தண்ணீர் பற்றிய குறும்படவிழாவும் நடைபெற்றன.

மேற்காணும் செய்தியை தங்கள் நாளேட்டில் வெளியிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

தங்களன்புள்ள
இரா.சிவக்குமார்
ஊடக ஒருங்கிணைப்பாளர்